T-UN-429

தமிழ் வாழ்க

# தமிழ்ப் பொழில்

துணர்: ௫௫ மலர்: ௭

திருவள்ளுவர் யாண்டு ௨௰௧௨
துன்மதி: ஐப்பசி
(1981 அக்டோபர்–நவம்பர்)

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

பொழிற்றொண்டர் :
...ரு அரங்க வே. சுப்பிரமணியன், பி. ஏ.,

# தமிழ்ப் பொழில்

துணர் : ருரு          உள்ளுறை          மலர் : எ

பக்கம்


1 " ஒரு கோட்டுக்கு வெளியே ..........." 147
நாவலின் நோக்கமும் பயனும்
—டாக்டர் A. N. பெருமாள்

2 வள்ளலார் வகுத்த பெரு நெறி 154
—டாக்டர் வ. பெருமாள், எம். ஏ; பி. டி; எம். ஆர். ஏ. எசு., எப். எப். ஐ;
தலைமைப்பேராசிரியர்,
மற்றும் தலைமை ஆராய்ச்சி நெறியாளர், பண்பகம்
இராபர்ட்சன் பேட்டை, சொர்ண நகர், கோலார் தங்கவயல்
(K. G. F.) 563 122, கருநாடகம்.

3 ஒரு பறவைப் பார்வையில்...........
தமிழாய்வின் தோற்றமும் வளர்ச்சியும் 158
—சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ., எம். ஃபில்.

4 தமிழில் அகரம் 161
—டாக்டர் ஆதித்தன்

5 கொடிறுடைக்கும் கூன்கை 167
— வ. பாண்டியன், ஆராய்ச்சி மாணவர்,
தமிழ் இலக்கியத் துறை, சென்னை பல்கலைக் கழகம்
சென்னை - 600 005:

# தமிழ்ப் பொழில்

**கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு**

| துணர் ௫௫ | திருவள்ளுவர் யாண்டு உ௰௧௨<br>துன்மதி-ஐப்பசி<br>1981 அக்டோபர்—நவம்பர் | மலர் ௭ |
|---|---|---|


தமிழ் வாழ்க

## “ஒரு கோட்டுக்கு வெளியே … …”
## —நாவலின் நோக்கமும் பயனும்

—டாக்டர் **A. N.** பெருமாள்

**அறிமுகம்:**

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் ஒருவருடனொருவர் பொருந்தி வாழ முடியாது தவிக்கும் மக்கள் சமுதாயத்தை வேதனையுடன் நோக்கிய நாவலாசிரியர் திரு சு. சமுத்திரம் ஒரு விதமான புரட்சிகர நோக்கத்தை மனதில் கொண்டு ‘‘ஒரு கோட்டுக்கு வெளியே…’’ என்ற நாவலை உயிரும் உணர்ச்சியும் மிக்க பாத்திரங்களின் உதவியால் படைத்துள்ளார். சிற்றூர் சூழலில் வேளாண்மைக் குடியிருப்பில் பல்வேறு சாதியினர் கூடிக் குழுமி வாழும் வாழ்வில் தோன்றும் முரண்பாடுகளையும் மோதல் களையும் நன்றாகக் கண்டு மனக்குமுறலுடன் எழுதப்பட்ட நாவ லாக இது தோன்றுகிறது.

பல நிகழ்ச்சிகளில் நாவலாசிரியர் நாட்டின் நடப்பையும் சமுதாயத் தின் போக்கையும் நடப்பு உண்மைகளுக்குச் சிறிதும் மாறுபடாது அப்படியப்படியே அகமும் புறமும் விளங்கித் தோன்றுமாறு சமுதாய அறுவை (Social Operation) செய்து காட்டுவது அரிய படைப்புத் திறனாகத் தோன்றுகிறது. குறிப்பிட்ட ஒரு சாதியில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைப் பொருளாதார நோக்குடன் நன்றாகப் பார்த்து அதன் காரணமாகத் தோன்றும் பல்வேறு பிரச்சனைகளை விளக்கி உணர்ச்சிப் பெருக்குடன் நாவல் நடை யிடுகிறது. மேல் கீழ் என்ற இருவேறு சாதித் தரங்களும் (High Caste and Low Caste) பிரச்சனைக்கு உரியதாக்கப்பட்டு அல சப் படுகின்றன. இது எந்தக் குறிப்பிட்ட சாதிக்கும் எதிராக

# தமிழ்ப் பொழில்

துணர் : ருரு உள்ளுறை மலர் : எ

## பொருளடக்கம்

பக்கம்

1 "ஒரு கோட்டுக்கு வெளியே..........." 147
நாவலின் நோக்கமும் பயனும்
—டாக்டர் A. N. பெருமாள்

2 வள்ளலார் வகுத்த பெரு நெறி 154
—டாக்டர் வ. பெருமாள், எம். ஏ; பி. டி; எம். ஆர். ஏ. எசு.,
எப். எப். ஐ;
தலைமைப்பேராசிரியர்,
மற்றும் தலைமை ஆராய்ச்சி நெறியாளர், பண்பகம்
இராபர்ட்சன் பேட்டை, சொர்ண நகர், கோலார் தங்கவயல்
(K. G. F.) 563 122, கருநாடகம்.

3 ஒரு பறவைப் பார்வையில்...........
தமிழாய்வின் தோற்றமும் வளர்ச்சியும் 158
—சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ., எம். ஃபில்.

4 தமிழில் அகரம் 161
—டாக்டர் ஆதித்தன்

5 கொடிறுடைக்கும் கூன்கை 167
—வ. பாண்டியன், ஆராய்ச்சி மாணவர்,
தமிழ் இலக்கியத் துறை, சென்னை பல்கலைக் கழகம்
சென்னை - 600 005:

# தமிழ்ப் பொழில்

**கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு**

| துணர் ருரு | திருவள்ளுவர் யாண்டு உ0கஉ<br>துன்மதி-ஐப்பசி<br>1981 அக்டோபர்—நவம்பர் | மலர் எ |
|---|---|---|


தமிழ் வாழ்க

## "ஒரு கோட்டுக்கு வெளியே ... ..."
## —நாவலின் நோக்கமும் பயனும்


—டாக்டர் **A. N.** பெருமாள்


**அறிமுகம்:**

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் ஒருவருடனொருவர் பொருந்தி வாழ முடியாது தவிக்கும் மக்கள் சமுதாயத்தை வேதனையுடன் நோக்கிய நாவலாசிரியர் திரு சு. சமுத்திரம் ஒரு விதமான புரட்சிகர நோக்கத்தை மனதில் கொண்டு "ஒரு கோட்டுக்கு வெளியே..." என்ற நாவலை உயிரும் உணர்ச்சியும் மிக்க பாத்திரங்களின் உதவியால் படைத்துள்ளார். சிற்றூர் சூழலில் வேளாண்மைக் குடியிருப்பில் பல்வேறு சாதியினர் கூடிக் குழுமி வாழும் வாழ்வில் தோன்றும் முரண்பாடுகளையும் மோதல் களையும் நன்றாகக் கண்டு மனக்குமுறலுடன் எழுதப்பட்ட நாவலாக இது தோன்றுகிறது.

பல நிகழ்ச்சிகளில் நாவலாசிரியர் நாட்டின் நடப்பையும் சமுதாயத்தின் போக்கையும் நடப்பு உண்மைகளுக்குச் சிறிதும் மாறுபடாது அப்படியப்படியே அகமும் புறமும் விளங்கித் தோன்றுமாறு சமுதாய அறுவை (Social Operation) செய்து காட்டுவது அரிய படைப்புத் திறனாகத் தோன்றுகிறது. குறிப்பிட்ட ஒரு சாதியில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைப் பொருளாதார நோக்குடன் நன்றாகப் பார்த்து அதன் காரணமாகத் தோன்றும் பல்வேறு பிரச்சனைகளை விளக்கி உணர்ச்சிப் பெருக்குடன் நாவல் நடையிடுகிறது. மேல் கீழ் என்ற இருவேறு சாதித் தரங்களும் (High Caste and Low Caste) பிரச்சனைக்கு உரியதாக்கப்பட்டு அலசப் படுகின்றன. இது எந்தக் குறிப்பிட்ட சாதிக்கும் எதிராக

எழுதப்பட்டது இல்லை என்பதை ஆசிரியர் முன்குறிப்பாக முன்னுரையில் உணர்த்துகிறார்.1 இதிலிருந்து இந்நாவலில் ஆசிரியர் தீர்வுகாண விரும்பும் சமுதாயச் சிக்கல் ஒரு பொதுப் பிரச்சனை என்பதை உறுதிப்படுத்துகிறார்.

**நாவல் வகை:**

சமுதாய நடப்புகளைச் சுவையாக இலக்கிய நயம் விளங்கக் கூறுவதைச் சமூக நாவல்கள் என்று கூறலாம். ஒரு கோட்டுக்கு வெளியே ... ... ...'' என்ற நாவல் புரையோடிப் போயிருக்கும் சமுதாயச் சீர்கேடுகளை வெளிப்படுத்துவதுடன் அவற்றைச் சீர் செய்யும் வழிமுறைகளைப் பற்றியும் விரிவாகச் சிந்திக்கிறது. நடந்ததைக் கூறுவதுடன் நடக்க வேண்டியதையும் எடுத்துச் சொல்கிறது. ஆசிரியர் விரும்பும் சமுதாய அமைப்பு எவ்வாறு இருக்கும் என்பதையும் குறிப்பாகக் காட்டுகிறது. இதில் சமுதாயத்தைக் காட்டிலும் சமுதாயப் பிரச்சனை முக்கிய இடம் வகிப்பதினால் இந்நாவலைச் சமுதாயப் பிரச்சனை நாவல் (Novel of Social Problems) என்று அழைப்பது பொருத்தமாக இருக்கலாம்.

**நோக்கம்:**

உடலுழைப்பும் மனவுறுதியும் தவிர வேறு எதுவும் தனக்கென இல்லாத உலகம்மை என்ற ஏழைப் பெண்ணைக் கொண்டு, பரம்பரைச் சொத்துரிமை என்ற பட்டாவால் வலிமை பெற்று வாய்க்கு வந்தபடி பேசியும் மனதுக்கு வேண்டியபடி ஆடியும் கேள்விமுறையற்று அநியாயம் செய்தும் தங்கள் முன்னுரிமையைக் காட்டித் திரியும் பண்பற்ற பணக்காரரைச் சத்திய வேகங் கொண்டு எதிர்த்துப் பின்னடையச் செய்வதே ஒரு கோட்டுக்கு வெளியே ... ...' என்ற நாவலின் நோக்கம். இந்தச் சிறந்த நோக்கத்தை வலியுறுத்திக் காட்ட நாவலாசிரியர் பல உத்திகளை மிக நுட்பமாகக் கையாள்வதைக் காணலாம்.

உண்மைக்குப் புறம்பாகவோ நடப்புக்கு மாறாக மிகைப்படுத்தியோ செயல்களைக் காட்டினால் படிப்போர்க்கு ஒருவிதமான நம்பிக்கைத் தளர்ச்சி ஏற்படுவதை உணரலாம். நாவலின் முதற் காட்சியில் ஊரில் செல்வாக்கிலும் சொல்வாக்கிலும் மிகுந்தவரான மாரிமுத்து முன்னின்று அழைத்த குரலுக்கு முகங் கோணாது அடங்கி ஏழையிலும் ஏழையான உலகம்மை பின் நடப்பதை நடப்பு உண்மையின் நிழற்படமாக ஆசிரியர் மிக அடக்கமாகக் காட்டுகிறார். இந்த அடக்கத்தில்தான் பின்னால் நிகழவிருக்கும் புரட்சித் தீயின் தீவிரமான வேகமும் அடங்கி

இருக்கிறது. முதன்முதலில் சொன்ன சொல்லுக்கு மறுசொல் பேச நினைக்காது பணிந்த ஏழைப்பெண் எப்படி இறுதியில் ஓர் உலகம் கூடிக் கெஞ்சியபோதும் தன் உறுதியை விட்டுக் கொடுக்காது எதிர்ப்புக் குரல் முழங்கி சத்திய ஒலியாக ஓங்கி நிற்கிறாள் என்பதே இந்த நாவலில் கிடைக்கும் அரிய புதைய லாகக் காணப்படுகிறது.

நாவலின் இடைநடுவே 'எலியும் பூனையும் மாதிரி சண்டை போடு றாக' என்ற நாட்டுப்புறப் பழமொழியை நயமாகச் சொல்லி விளக்குவது போன்று நாவலாசிரியர் தன்னுடைய உள்ளக் கருத்தைத் தெள்ளத் தெளிய விளக்குகிறார்.[2] பூனையைக் கண்டதும் எலி ஓடிவிடும். ஒருநாளும் எதிர்த்துச் சண்டை யிடாது இந்த இரு எதிர் ஆற்றல்களையும் ஒரே தட்டில் வைத்துச் சமனப்படுத்திப் பேசப்படுவதின் உட்பொருளைச் சிந் திக்கத் தூண்டுகிறார் ஆசிரியர். செல்வந்தனால் ஒதுக்கப்படும் ஏழைக்கு யாரும் ஆதரவு கொடுப்பதில்லை. மாறாக இவ்வளவு பெரிய செல்வந்தனை இந்த ஏழை பகைக்கலாமா என்று குறை கூறுவர். உலகத்தின் இத்தகைய இழிந்த நடப்பையே ஆசிரியர் இந்தப் பழமொழியால் விளக்குகிறார்.

உலகம்மையின் தந்தையான மாயாண்டியை ஊர்ப் பெரியவரான மாரிமுத்து தனக்கு அவர் பணம் தரவேண்டுமென்று கூறி மாரி யம்மன் கோவில் திடலில் கோடு கீறி அதற்குள் நிறுத்திவிட்டார். ஊரெல்லாம் திரண்டு ஊமையாகி நிற்கிறது. வேற்றூருக்குப் பாடுபடச் சென்ற உலகம்மை ஓடி வருகிறாள். தந்தையின் அவலநிலை அவளை வாட்டி வதைக்கிறது. திக்கற்ற நிலையில் தவிக்கிறாள். அவளை நாடுவாரில்லை. மாறாக வசைபாடு கிறார்கள். அங்கு நிலவிய அலங்கோலச் சூழலைக் கண்டு அருவருத்துத் தலைதெறிக்க ஓடுகிறாள். காவல் நிலையத்தில் நடந்தவற்றைக் கூறி ஒரிரு காவலரைக் கட்டாயப்படுத்தி அழைத்து வருகிறாள். நிலைமையை அறிந்த மாரிமுத்து தன் னைக் காக்கும் முன்னணையாகக் கீறிய கோட்டை அழித்த துடன் தன் ஆணவத்தையும் போலியாக அடக்கி விடுகிறார். காவலருக்குச் செயற்கைப் பானமும் இயற்கைப் பானமும் தரப் படுகின்றன. காவலரின் வயிற்றுக்குள் அநியாயத்தின் நன் கொடையான பானம் இறங்கியதும் அவர்களுடைய உள்ளத்தி லிருந்து நியாயவுணர்வு வெளியேறி விடுகிறது. எலி பூனையை எதிர்ப்பது நியாயமா என்ற வழக்குத் தீர்வுகாணக் காவலர் முயல் கின்றனர்.

சுற்றி நிற்போரின் வாயில் உண்மை வறண்டுவிட்டதினால் நாவு நயவஞ்சகவுரைகளைக் கக்கியது. அத்தனையும் மாரிமுத்துக்கு ஆதரவாகவும் மாயாண்டிக்கு எதிராகவும் விரித்தன. அதன் பயனாகக் குற்றமற்ற மாயாண்டி காவல் நிலையக் கம்பிகளை எண்ணிக்கணக்கிடக் காவலர்களால் இழுத்துச் செல்லப்படுகிறார். கட்டி இழுத்துச் செல்லப்படும் தாய்ப்பசுவின் பின்னால் கதறி யோடும் கன்றுபோல் உலகம்மை ஓடினாள் என்று ஆசிரியர் ஆற்றாது கூறி அரற்றுகிறார்.[3]

ஏழைக்கு ஊரும் உதவவில்லை; காவல்நிலையமும் கைகொடுக்க வில்லை. ஊர் மக்கள் இந்நிகழ்ச்சியால் எந்தவிதமான பாதிப் புக்கும் ஆளானதாகத் தெரியவில்லை. இதை மிகவும் நயமாக வும் குறிப்பாகவும் உணர்த்த விரும்பிய ஆசிரியர். தராசை அவர் (உருளைக் கிழங்கு விற்பவர்) சமமாகப் பிடித்திருந் தார்.[4] நீதியற்ற ஊரில் கவலையற்ற தராசு சமமாக நின்றது. உலகம்மை உணர்ச்சியால் அளவுக்கு மீறி உந்தப்பட்டு ஊர்த் தேவதையான காளி தேவியையே கேள்வி கேட்டுவிடுகிறாள். அடியே காளீ! இவ்வளவு நடந்தப் பொறவும் ஒனக்கு அங்க இருக்க என்னடி யோக்கியத இருக்கு?'[5] உலகம்மையின் வாயி லிருந்து வெடிக்கும் வினாக்களும் உள்ளத்தில் மையங் கொண் டுள்ள கடுங்கனலும் நடப்பு சமுதாயத்தின் ஆணிவேரை ஆற்ற லுடன் அசைப்பதை ஆசிரியர் உறுதியாகக் காட்டுகிறார்.

ஊருக்கு வெளியே அரிசனங்கள் வாழும் சேரி இருக்கிறது. உயர்ந்தவர்கள் என்று தங்களைக் கருதுபவர்களிடம் இல்லாத அன்பு தாழ்ந்தவர்களாகப் பிறரால் கருதப்படும் அரிசனங்க ளிடம் இருக்கிறதா என்று காணும் ஆவலுடன் உலகம்மை அவர் களை நாடுகிறாள். நாகரிகம் இன்னும் தவழாத சேரிகளில் அன்பும் ஆதரவும் முன்பே குடியேறி யிருப்பதை உலகம்மை காண்கிறாள். 'எல்லா மனுசனும் மோசமல்ல' என்று அவ ளுடைய தந்தை முன்பு சொன்னது நினைவுக்கு [6]வந்தது. வாழ்க்கையில் ஒரு பிடிப்பும் நம்பிக்கை ஒளியும் துளிர்த்தன.

ஊர்க்கொடுமை தாங்காது உலகம்மையின் தந்தை உயிரை விட்டு விடுகிறார். அவருக்குக் கொள்ளி வைக்கும் உரிமையைச் சேரியி லுள்ள இளைஞன் ஒருவனுக்குக் கொடுத்து அவனைத் தன் சகோதரனாக ஏற்றுக் கொள்கிறாள். 'மேல் சாதியில் இருக்கிற ஏழைபாளைங்களும் அரிசனங்கதான்' என்ற முடிவுக்கு உல கம்மை வந்து விடுகிறாள்.[7] அவள் கொள்கையளவில் மாத்திர மல்லாமல் உள்ளத்தளவிலும் மாறித் தோன்றினாள். சாதி

வேறுபாட்டை அவள் முற்றிலும் வெறுத்து மறந்துவிட நினைக்கிறாள். ஆகையினால் சேரியில் குடிசை கட்டித் தன்னைக் குடியமர்த்தி விடுகிறாள். சேரியிலிருந்த படித்துத் தேறிய அருணாசலம் உலகம்மையைப் பற்றிக் கூறுவது நாவலின் உட்பொருளை உடைத்துக் கூறுவதாக உள்ளது.

'உலகம்மை ஊரை செண்டிமெண்டலா மட்டும் பகைக்கல. ஐடியலாசிக்கலாகவும் பகைச்சிருக்கா! மேல் சாதி நெருப்புல புடம் போட்ட அரிசனப் பெண்ணா மாறியிருக்காள்'[8]

மேலும் அவன் கூறுவது நாவலின் திரண்ட கருத்தைச் சுருக்கித் தருவதாக அமைகிறது.

''நாட்ல நிலவுற வகுப்புக்கள வர்க்கப்படுத்தணும்.
மேல்சாதி ஏழையும் கீழ்சாதி அரிசனங்களும் ஒரே
வர்க்கமாகப் போற காலம் வரத்தான் போவுது'[9]

அவள் சேரிக்குச் செல்ல வேண்டியதில்லை என்று ஊரார் கூடிக் கூறியதை அடியோடு உலகம்மை மறுத்துவிடுகிறாள். அவளுடைய சேரிக் குடியேற்றத்தால் மேல்சாதியினருடைய உயர்வு பாதிக்கப்படும் என்று கருதியே அவர்கள் அவளைத் தடுத்தனர். அவளோ இவர்களால் ஏழைகளுடைய வாழ்வு பாதிக்கப்படுமேயன்றி மேம்படாது என்று உறுதியாக நினைக்கிறாள். தன்னைப் பற்றி உலகம்மை 'நான் மேல்சாதியில் செத்து கீழ்சாதியில் பிழச்சிக்கிட்ட பொம்புள' என்று கூறுவதில் அவள் கண்டுணர்ந்த உண்மையும் ஆசிரியர் உணர்த்த விரும்பும் கருத்தும் விளங்கும்.

படிப்படியாகத் தன் கருத்துக்கு உருவமும் விளக்கமும் கொடுக்க ஆசிரியர் பல உத்திகளைக் கையாள்வதைக் காணலாம். முதலில் இயல்பான நடப்பை இணக்கமாகக் காட்டுகிறார். பின் மேல்படியினரின் மனக் குறும்பும், ஆணவப் போக்கும் அறிவிக்கப் படுகின்றன. எதிர்ப்பாற்றலில் குன்றிய ஏழையின் அவல நிலையும் அவர்களை ஒடுக்க வகை வகையான தந்திரவுத்திகளைக் கடை பிடிக்கும் செல்வரின் குறுநிலையும் விளக்கம் பெறுகின்றன. புறத் தாக்குதலால் அடக்க முடியாத ஏழையின் மனவேகம் புயலாக உருவெடுத்து எத்தகைய துன்பத்தையும் தாங்கும் உள்ள வுறுதியைக் கொடுக்கிறது. எதிர்ப்புத் தீ கவ்விய நிலையிலும் உலகம்மை 'அசாத்தியமான தைரியத்துடனும், (152) கம்பீரமாகவும் (161) இருந்ததாக ஆசிரியர் கூறுகிறார் ஊர் அவளுக்குப் பணிந்தது; பணத்திமிர் அவளைக் கெஞ்சியது; ஆனால்

உலகம்மையோ அனைவரையும் பின்தள்ளித் தன் கொள்கையில் முன்னேறிப் புடம்போட்ட தங்கமாகப் பொலிந்து தோன்றுகிறாள்.

**பயன்கள்:**

காலமாற்றத்தை வெளிப்படுத்திக் காட்டுவது இந்த நாவல். தன்னுடைய ஆற்றலும் உரிமையும் அறியாது, பணம் படைத்தோர்க்கு அஞ்சி ஒடுங்கும் உழைத்துக் களைக்கும் ஏழைகளுக்கு உணர்ச்சியும் உறுதியும் ஊட்டும் பேராற்றல் இந்த நாவலுக்கு உள்ளது. அஞ்சாத நெஞ்சமுடன் நேர்மைக் குரல் எழுப்பி நின்ற உலகம்மைக்கு அவளை எதிர்த்த அத்தனை பேரும் புழுக்களாய்த் தோன்றியதாக நாவல் விளக்குகிறது. இறுதிவரை உலகம்மை 'நம்பிக்கை' என்ற தாரக மந்திரத்தைக் கைவிடவில்லை என்பது அழுத்தம் திருத்தமாக உணர்த்தப்படுகிறது. அனைவருக்கும் வேண்டுவது அதுவே என்பது அறியத்தக்க உண்மை.

சமுதாய சீர்கேடுகளை எடுத்துக் கூறுவதைப் பல இடங்களில் காண முடிகிறது. அத்தகைய கேடுகளிலிருந்து சமுதாயம் திருத்தங் காணவேண்டும் என்பது ஆசிரியரின் நோக்கமாக உள்ளது. ஊர்த் தலைவனுக்குப் பணியாதவனை ஊரே பகைத்துத் தனிமைப் படுத்தும் கொடுமை, கடன் கொடுக்க இயலாதவனைக் கோட்டைக் கீறி நிறுத்தும் கொடுமை, செய்த தொழிலைச் சுட்டி இழிவுபடுத்தும் சிறுமை, அஞ்சியஞ்சி அநியாயத்துக்குப் பணியும் பேதைமை போன்றவற்றை நாவல் வன்மையாகக் கண்டிக்கிறது. அநியாயத்தை எதிர்த்து நியாயத்தை நிலைநாட்டும் வீரத்தை ஏழை எளியவர்க்கு இந்நாவல் கொடுக்கிறது.

இருப்போன் இல்லாதவனைக் கொடுமைப்படுத்தும் இரக்கமற்ற செயலை ஈவு இரக்கமின்றித் தொலைக்க வேண்டும் என்பதை உணர்த்தவே 'கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கும்' என்று ஆசிரியர் கூறுகிறார்.[11] மேலும் கடினமான பொருளாதாரத் தத்துவங்களையும் இத்தகைய எளிய மக்களின் வாழ்க்கைப் போக்குகளுடன் இணைத்து விளக்க முயல்கிறார். இவ்வாறு 'அதிகாரக் குவிப்பு' (Concentration of power. — பக். 141), 'பொருளாதாரத் தடைவிதிப்பு' Economic Bkockade,— பக். 168) போன்றவற்றை விளக்கிச் செல்வது மிக்கப் பயனுடைய பாட போதனையாகவும் வாழ்வழிகாட்டலாகவும் அமையும். நாவலின் நோக்கம் நன்று. பயனைப் பொறுத்திருந்து காண வேண்டும்.

சமுதாயத்தில் நடப்பதை மனிதாபிமான உணர்வுடன் கண்டு தீமையைக் கொன்று நன்மையை நிலைநாட்ட வேண்டுமென்ற தணிக்க முடியாத ஆவலுடன் உணர்ச்சி பூர்வமாக எழுதப்பட்ட 'ஒரு கோட்டுக்கு வெளியே ... ...' என்ற நாவலின் ஆசிரியர் சு. சமுத்திரம் ஒரு புதுமையான புரட்சிக் கருத்துடைய முற்போக்கு எழுத்தாளர் என்பதை இந்த நாவலின் மூலம் மிகத் தெளிவாகக் காட்டிவிடுகிறார்.

—(o)—

**அடிக்குறிப்புகள்:**

1 சு. சமுத்திரம், ஒரு கோட்டுக்கு வெளியே ... ...', எழுத்தாளன் + எழுத்து = வாசகன், பக். iii-vi.
2 மேற்படி ,, பக். 100.
3 மேற்படி ,, பக். 102.
4 மேற்படி ,, பக். 82.
5 மேற்படி ,, பக். 83.
6 மேற்படி ,, பக். 183.
7 மேற்படி ,, பக். 242.
8 மேற்படி ,, பக். 242.
9 மேற்படி ,, பக். 243.
10 மேற்படி ,, பக். 251.
11 மேற்படி ,, பக். 188.

—o—

# வள்ளலார்

# ✱✱✱ வகுத்த பெருநெறி* ✱✱✱

பேராசிரியர் வ. பெருமாள்,
எம். ஏ; பி. டி; எம். ஆர். ஏ, எசு; எப். எப் ஐ;
தலைமைப்பேராசிரியர் மற்றும் தலைமை ஆராய்ச்சி தெறியாளர்,
பண்பகம், இராபர்ட்சன் பேட்டை,
சொர்ண நகர், கோலார் தங்க வயல், (K. G F.) 563 122,
கருநாடகம்.

## (உ)

''இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாம் குழித்தொட்டி மண்மூடிப் போட்டுத்
தெருட்சாரும் சுத்தசன் மார்க்கநன் நீதி
சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்
அருட்சோதி வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவர் நீரே''

இப்பாட்டுக்கள் வள்ளலாரின் புரட்சி நெறியை நன்கு காட்டு கின்றன. ஊருக்கு மட்டும் உபதேசம் செய்யாமல் வள்ளலார் இப்புரட்சி நெறியைச் செயலிலும் கடைப்பிடித்தார்.

''சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன்
சாத்திரக் குப்பையும் தவிர்த்தேன்''

''சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட் பெருஞ் சோதி''

''இந்தச் சாதி இந்தமதம் எனும்
சழக்கை யெலாம் தவிர்த்த சத்தியனே''

''சாதிகுலம் சமயமெலாம் தவிர்த்தெனை மேலேற்றித்
தனித்ததிரு வமுதளித்த தனித்தலைமைப் பொருளே''

இப்பாக்களை ஆராயுமிடத்துப் பழமை குறைவாகவும் புதுமை மிகுதியாகவும் இருப்பதைக் காணலாம்.

---

*துணர் 55, மலர் 6, பக்கம் 129 இன் தொடர் கட்டுரை.

**பக்தி நெறி:**

தமிழ்ப் புலவர்களில் பொருளுக்காகப் பாடியவர்களும் உண்டு; அருளுக்காகப் பாடியவர்களும் உண்டு. பொருளுக்காகப் பாடியவர்கள் ஆசையால் உந்தப்பட்டு வெறும் பாட்டைப் பாடினார்கள். அன்னார்தம் இயல்பை,

''போற்றினும் போற்றுவர் பொருள்கொ டாவிடின்
தூற்றினும் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர் வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே.''

என்னும் பாடல் நன்கு விளக்குகின்றது. வள்ளலார் தூய பக்தியால் உந்தப்பட்டு அருள் உள்ளத்தோடு இறைவனைப் பாடினாரே தவிர, வயிற்றுப் பிழைப்புக்காக மனிதரைப் பாடினார் அல்லர். செல்வத்திற்காகப் பாடுகின்ற பாட்டெல்லாம் செல்வம் செல்வதைப் போல் கால வெள்ளத்தில் சென்று விடும். இறைவனைப் பற்றிய அருட்பாக்கள் என்றும் நிலைத்து நிற்கும் பக்திப் பாட்டே உண்மையான பாட்டு; நிலைத்த பாட்டு; அருள் பாட்டு; உயிரோடு கலக்கின்ற ஞானப் பாட்டு.

''நடராசர் பாட்டே நறும் பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும் பாட்டு
சிதம்பரப் பாட்டே திருப் பாட்டு
அம்பலப் பாட்டே அருட் பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு''

என்று இனிது பாடி வள்ளலார் தம் தூய பக்தி நெறியை நன்கு புலப்படுத்துகின்றார்.

**பொதுமை நெறி:**

எம்மதமும் சம்மதம் என்பதே இராமலிங்க அடிகளாரின் கோட்பாடு. வேற்றுமையில் ஒற்றுமை காண்கின்ற பரந்த நோக்கத்தையும் பொதுமை உணர்ச்சியையும் வள்ளலார் பாட்டுக்களில் காணலாம்.

''எம்மத நிலையும் நின்னருள் நிலையில் இலங்குதல்
அறிந்தனன்
எல்லாம் சம்மத மாக்கிக் கொள்கின்றேன்.''

என்பது வள்ளலார் அருட்பா. ஒரே பொருளுக்குப் பல பெயர்கள் இருப்பதைப்போல ஒரே இறைவனுக்குப் பல பெயர்கள் உண்டு. பெயர்கள் பல; குறிக்கப் படுகின்ற பொருள் ஒன்றே. எல்லாச் சமயங்களுக்கும் இடையேயுள்ள அடிப்படைக் கருத்து ஒற்றுமையை உணர்த்தி நடுநிலை உணர்ச்சியுடன் பொதுமை நெறி உண்டாக்கிய பெருமை வள்ளலாரைச் சேரும்.

''பெருகியபேர் அருளுடையார்
அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகை என் கணவர் திருப்
பேர்புகல்என் கின்றாய்
அருகர் புத்தர் ஆதி என்பேன்
அயன் என்பேன் நாரா
யணன் என்பேன் அரன் என்பேன்
ஆதிசிவன் என்பேன்
பருகுசதா சிவம் என்பேன்
சத்திசிவம் என்பேன்
பரமம் என்பேன் பிரமம் என்பேன்
பரப்பிரமம் என்பேன்
துருவுசுத்தப் பிரமம் என்பேன்
துரியநிறை வென்பேன்
சுத்தசிவம் என்பன் இவை
சித்துவிளை யாட்டே''

**ஆன்மீக நெறி:**

பிறரையும் தம்மைப்போல் எண்ணி அதற்கேற்ப ஒழுக வேண்டும் என்று கூறுவது மனித நெறி. பிற உயிரையும் தம்முயிர்போல மதித்து வாழ வேண்டும் என்பது ஆன்மீக நெறி. மனிதநெறியை விட ஆன்மீக நெறி உயர்ந்தது. பிற உயிர்களையும் தம்முயிர் போல் எண்ணி, ஒத்த உணர்ச்சியுடன் மகிழ்ந்து வாழ்பவரின் தூய உள்ளத்தில் இறைவன் குடி கொண்டிருக்கின்றான் என்று வள்ளலார் பாடுகின்றார்.

''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம் புரியும்
இடமென நான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ''

என்னும் அருட்பா ஆன்மீக நெறியையும் ஆன்மீக ஒருமைப் பாட்டையும் நன்கு இயம்புகின்றது.


"காக்கை குருவி எங்கள் சாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்"
... ... ... ...
கொத்தித் திரியும் அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!
எத்தித் திருடும் அந்தக் காக்காய்—அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா!"
—பாரதியார்.

ஆன்மநேய ஒருமைப்பாட்டை விளக்குகின்ற பாரதியார் கவிதைகளும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கன. உடம்பால் வேறுபட்டாலும் எல்லா உயிரினங்களும் உயிரால் ஒன்றுபட்டவை என்ற அடிப்படையான உண்மையைக் கொண்ட நெறியே வள்ளலார் கண்ட ஆன்மீக நெறி.

சமரசப் பெருநெறி:

சமயம், சமுதாயம், அறிவு, ஆன்மீகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் வள்ளலார் ஒற்றுமையை நன்கு வலியுறுத்துகின்றார். அன்பு, அருள், இரக்கம், அறிவு, சமத்துவம், நீதி, புதுமை (புரட்சி), பக்தி, பொதுமை, ஆன்மநேயம் ஆகியவை நன்கு இயைந்து, எல்லோரையும் ஒன்றுபடுத்தி நல்வாழ்வு வாழ வள்ளலார் வகுத்த நன்னெறியே சமரசப் பெருநெறி. இன்றைய உலக ஒற்றுமைக்கு ஒரே ஒரு நெறிதான் உண்டு. அதுதான் வள்ளலார் வகுத்த சமரசப் பெருநெறி.

———:(o):———



ஒரு பறவைப்
பார்வையில் ... ... ...

# தமிழாய்வின்
# தோற்றமும் வளர்ச்சியும் [2]

—சி. கோ. தெய்வநாயகம்,
எம். ஏ; எம். ஃபில்;

இந்நிலையில் சிலப்பதிகாரம், எட்டுத் தொகை எனும் நூல் களுக்கு உரையாசிரியர்களாகிய அரும்பத உரைகாரரும், அடியார்க்கு நல்லாரும், நச்சினார்க்கினியரும் தோன்றி இந்நூல் இன்ன கருத்தை விளக்குகின்றது; இக்காதை, இப்பாடல், இன்ன பொருளது என பொருள்முடிபு காணும் அல்லது "நுதல் பொருள் தேரும் ஆராய்ச்சியாக" தமதாய்வுச் சிந்தனைகளை தமிழருக்குக் கொடையாக்கிப் போந்தனர். நாலாயிரத் திவ்விய பிரபந்த ஈட்டுப் படிகளும் இவ்வாறமைந்தன.

கூற்றறிந்தார் எத்துங்கலி — நச்சினார்க்கினியத்தைக் கொண்டு "உச்சிமேற் புலவர்கொள்" பெருமையுடைத்தாகப் போற்றுமுறைத் திறனாய்வாகப் (Appreciative criticism) புகழப்பெற்றதை நிறுவுகிறது.

இவ்வாறு கி. பி. 16-ஆம் நூற்றாண்டுவரை "தமிழின் ஆராய்ச்சி" தமிழகப் பண்பாடுகளுக்கேற்பத் தொல் பழங்கால முதல் பாராட்டு முறையிலும், விளக்க முறையிலும், புதுப் பொருள் காண்டல் எனும் முறையிலும், இரு பொருட் கண்டு ஒரு பொருள் துணிதல் முறையிலும், நுதல் பொருள் தேர்ச்சி முறையிலும், தனித்திறம் வாய்ந்ததாக அமைந்தது. இவ்வமைவு முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோற் போற்றி அமைந்த நெறியினைத் தழுவியது. முரண்பாடுகள், மறுப்புக்கள் சான்றுகள் அடிப்படையில் கருத்துக்களைக் கொண்டே அமைந்தன ஏற்கப்பட்டுவிட்ட ஆய்வுக் கொள்கை களைப் பின்பற்றி பலர் அவ்விலக்கண இலக்கியங்களாகத் தம் படைப்புகளைப் படைத்துச் சிறந்தனர். அவர்களுள்,

துணர் 55, மலர் 6, பக்கம் 134-இன் தொடர் கட்டுரை.

''விருத்தமெனும் ஒண்பாவிலுயர் கம்பன்''
''வெண்பாவிற் புகழேந்தி''
''பரணிக்கோர் சயங்கொண்டான்''

என குறிப்பிடப்படுவோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

கி. பி 16-ஆம் நூற்றாண்டு முதலாகத் தமிழகத்தில் மேலை நாட்டவரின் செல்வாக்கு வளர்ந்து, 17-ஆம் நூற்றாண்டில் ஓங்கியது. அவர்கள் தம் சமயப் பிரச்சாரத்திற்குக் ''கல்வி'' யினையும் ஒரு பிடி குழியாகப் பயன்படுத்தினர். அவ்வழி தமிழிற்கென இருந்த தனித்த இலக்கிய மொழிக் கொள்கைகள் ஒதுக்கப்பட்டு, மேனாட்டு மொழி இலக்கிய கொள்கைகளுக்கு, வளர்ச்சி கருதி; வன்மையுண்டாயிற்று.

மேனாட்டவரின் பழக்க வழக்கங்கள் நம்நாட்டு தட்ப வெப்பத் திற்கும் பண்பாட்டிற்கும், ஒல்லாதாயினும், நாகரிகம் எனும் மயக்கத்தால் நம் நாட்டவரால் ஏற்கப் பட்டதைப் போன்றே, மேனாட்டாரின் மொழி, இலக்கியக் கொள்கைகளும் ஏற்கப் பட்டன. மேனாட்டாரும் அவர்தம் நோக்கில் சிதறிக் கிடந்த நம் மொழியினையும் இலக்கியங்களையும் தத்தம் நோக்கில் ஆய்வு செய்தனர். 'சோசப் பெசுக்கி' எனும் வீரமாமுனிவர் ''இன்ன சொல் இன்ன பொருளது'' எனக்கூறும் அகரமுதலி யான ''சதுரகராதியை'' தமிழ்நிகண்டுகளின் வழி உருவாக்கி னார். எல்லீசு, சீகன் பால்கு, முனைவர் கிரீயர்சன், முனை வர் கால்டுவெல் போன்றோர் தமிழ் மொழியியல் குறித்து பன்னூறு கட்டுரைகளும், புத்தகங்களும் எழுதினர். முனைவர் சுவல், முனைவர் ஈல்ட்சு, பிளீட் போன்ற மேனாட்டாரும் தமிழில் தொல்பொருள்களைத் தத்தம் நோக்கில் ஆய்ந்து, ஆய்வு முறையினையும், காலமுறை ஆராய்ச்சியினையும் (chronological analysis) துவக்கி வைத்தனர். முனைவர் போப் போன்ற சான்றோர் ''திருவாசகம்'' போன்ற இன்றமிழ் நூல்களுக்குத் திறனமைந்த 'மொழி பெயர்ப்புக் கண்டு, அந்நெறியின் வளத் திற்கு முன்மாதிரியாய் விளங்கினர்.

இம்முறைகளை 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் திரு வையா புரிப் பிள்ளை, L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளை, சோமசுந்தரத் தேசிகர், மறைமலையடிகள், வ. உ. சி, திரு. வி. க, முனை வர் நாவலர் சோமசுந்தர பாரதியார், பாரதியார் முதலானோர் கண்டு பாராட்டியதுடன் அவ்வழியே தம் ஆய்வுகளைத் தமிழின் பாற் செலுத்தி ஆராய்ச்சிகளை நிகழ்த்தினர் (Research theories (western) as applied to Tamil)

இவ்வடிப்படையில் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையின் திருஞான சம்பந்தரின் காலம்'' எனும் கட்டுரை முதன்மை பெறுவதாகும். இவ்வழியதாய் படைக்கப்பட்ட பட்டினப்பாலை ஆராய்ச்சி, முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, மாணிக்கவாசகரின் காலம் என்பன மறைமலையடிகளாரின் ஆய்வுகள் ஆம்.

பா. வே. மாணிக்கவேல் நாயக்கர் தமிழ் எழுத்துக்களின் அமைவுகளைக் குறித்து ஆய்வுகள் நிகழ்த்தினார். L. D. சுவாமிக் கண்ணுப் பிள்ளை ''Indian Epimeris'' எனும் அரிய நூலைப் படைத்தார். விபுலானந்த அடிகள் யாழ்நூலைப் படைத்தார். இந்நூற்றாண்டில் இதுகாறும் மேலைநாட்டு ஆய்வுக் கொள்கை வழிமுறையில்தான் தமிழில் ஆய்வுகள் பெரும்பான்மை நடைபெற்றது. முனைவர் மு. வ. அவர்களின் திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், ஓவச் செய்தி, இளங்கோவடிகள் போன்ற ஆய்வுகளும், முனைவர் இராசமாணிக்கனாரின் பன்னூல்களும், முனைவர் சி. இலக்குவனாரின் தொல்காப்பிய ஆய்வும், பழந்தமிழும், முனைவர் வ. சுப. மாணிக்கனாரின் கம்பர், தமிழ்க்காதல், சிந்தனைக் களங்கள் ஆகியனவும், பேராசிரியர் வெள்ளைவாரணனாரின் திருமுறை ஆராய்ச்சியும், தொல்காப்பியமும் நன்னூலும், ஆய்வியல் வளர்ச்சி தமிழில் எத்தகைய மேன்மையினை உற்றுளது என்பதனை வெளிப்படுத்துகின்றன. இச்சிந்தனையினை வலுவூட்டுமாறு பன்மொழித் திறமும் பல்லிலக்கியத் திறமும் வாய்ந்த பேராசிரியர்களும், முனைவர்களும், அண்ணாமலை–சென்னை – மதுரை காமராசர் பல்கலைக் கழகங்களிலிருந்து தம் ஆய்வுச் சிறப்பினைத் தமிழ்ப் புலத்தார்க்கு மட்டுமின்றி வேற்றுப் புலத்தார்க்கும் பல்லாற்றானும் விளக்கமுறப் புகட்டி வருகின்றனர்.

இந்நிலையில் தமிழிற்கென தனித்தன்மை வாய்ந்த ஆய்வுக் கொள்கைகள் இருக்கின்றன. அவற்றை நாம்தான் இதுகாறும் மறந்திருந்து, மேனாட்டார் ஆதிக்கத்தால் புறக்கணித்து, ஒவ்வாத மேனாட்டு ஆய்வுக் கொள்கைகளை மேற்கொண்டிருந்தோம். இனியாகினும் நம் தமிழின் தனித்திறமமைந்த ஆராய்ச்சிக் கொள்கைகளை நாம் கொண்டு தமிழை முறையான வழியில் ஆராய்ச்சி செய்து அதன் பெருமையினைச் சிறக்க வைப்போம்'' எனும் தன் முனைப்புச் சிந்தனையும் எழுந்து வளர்ந்து வருகிறது. இவ்வழி ஆராய்ச்சிகளால் எந்தமிழ் நாளும் சிறக்க ... ... ...

———:(o):———

# தமிழில் அகரம்*

டாக்டர் **ஆதித்தன்.**

இலக்கணக்காரர்கள் கூறுகின்ற ஆறாம் வேற்றுமை உருபாகிய '—அ'கரத்திற்கும் பெயரடை விகுதியாகக் கருதப்படும் '—அ'கரத்திற்குமிடையே காணப்படுகின்ற தொடர்பினைக் கண்டு, இவ்விரு அகரத்தின் நிலையினை விளக்குவதே இக் கட்டுரை. இவ்வாய்வில் பெயரடைகளுக்கு, உண்மையான பெயரடைகள் என்று அறிஞர்களால் கூறப்பெறும் 'நல்ல', 'சிறிய' போன்றனவே எடுத்தாளப்பட்டுள்ளன.

தொடரியல் நிலையில் ஆறாம் வேற்றுமையும் பெயரடையும் பெயரைக் கொண்டே முடிகின்றன.

நல்(ல்) — அ நாடு (நன்மையை உடைய நாடு)

ஈண்டுப் பெயரடை விகுதியாகக் குறிக்கப் பெறும் '— அ'கரம் உடைமைப் பொருண்மையில் வருவதைக் காண்கிறோம்.

கோட்(ட்) — அ களிறு (கோட்டை உடைய களிறு)

'கோட்ட களிறு' எனும் தொடரில் வரும் '— அ'கரமும் உடைமைப் பொருண்மையில் வருகின்றது. இதனை ஆறாம் வேற்றுமை உருபு என்று கூறுகின்றோம். இவ்விரு தொடர்களில் வரும் இரு '—அ'கரமும் உடைமைப் பொருண்மையினைச் சுட்டி நிற்க ஒன்றனை ஆறாம் வேற்றுமை உருபெனவும் மற்றதனைப் பெயரடை விகுதி என்றும் ஏன் கூறுதல் வேண்டும்?

இலக்கண அறிஞர்கள் இவைகளின் வருகை காரணமாகவே இத்தகைய வொரு பாகுபாடு செய்திருக்கின்றனரோ என்று கருத வேண்டியிருக்கின்றது. 'கோட்ட' எனும் அமைப்பில் வரும் கோடு எனும் வடிவம் மொழியில் தனித்து வழங்குகின்றது. இப் பெயர்வடிவம் வேற்றுமை உருபேற்குங்கால் 'கோட்(ட்)—' எனத் திரிந்து நிற்கின்றது. எனவேதான் 'கோடு' எனும் பெயரின் வேற்றுமை ஏற்கும் வடிவமாகிய கோட்(ட்)—' எனும் என்பதற்கும் பின்னர் உடைமைப் பொருண்மையில் வரும் '—அ'கரம் வேற்றுமை உருபாகக் கருதப்பட்டுள்ளது.

'நல்ல' என்ற அமைப்பில் வரும் 'நல்(ல்)—' என்ற பகுதி கோடு எனும் வடிவம் போன்று தனித்து வழங்குதல் இல்லை. எனவேதான் பெயரைச் சிறப்பித்து வரும் விகுதி நீங்கிய இப் பகுதியினைப் பெயரடை அடி என விளக்கம் தந்தனர். இலக்கணக்காரர்கள்; பெயரடை அடியோடு இணைந்து வரும் காரணத்தால் உடைமைப் பொருண்மையில் வருகின்ற '—அ'க ரத்தை பெயரடை விகுதியெனக் குறித்தனர்

'—மகர' ஈற்றுப் பெயர்கள் வேற்றுமை ஏற்குங்கால் '—ம'கர ஈற்றினை இழத்தல் விதியாம். இதுபோன்றே '—மை' ஈற்றுப் பெயர்களும் இன்னொரு பெயரைச் சிறப்பித்து வேற்றுமை உறவு நிலையில் வருங்கால் '—மை' ஈற்றினை இழந்து விடு கின்றன.[1] 'நல்ல' நாடு' என்ற தொடரில் வரும் 'நல்ல' என்ற அமைப்பு 'நன்மை' என்ற பெயரின் இறுதி '—மை'யினை இழந்த வேற்றுமை ஏற்கும் வடிவமாகிய 'நல்(ல்)—' என்பதும் 'அ'கர உருபும் இணைந்த ஒன்றாகும்[2]

'கோடு' என்பதன் வேற்றுமை ஏற்கும் வடிவமாகிய 'கோட்(ட்)—' என்பது தனித்து வழங்காமை போன்று 'நன்மை' என்பதன் திரிந்த வடிவமாகிய 'நல்(ல்)—' என்பதும் தனித்து வழங்குதல் இல்லை. எனவே இத்தகைய பெயரடைகளை ஆறாம் வேற்றுமை உருபேற்ற பெயர்களாகக் கருதலாமன்றோ?

அடுத்துத் தமிழில் ஆறாம் வேற்றுமையினது நிலையினைக் காண லாம். எல்லா வேற்றுமைகளும் பெயர் வினைகளுக்கிடையே யுள்ள உறவினைப் புலப்படுத்தி நிற்கக் காண்கிறோம். பெயர் வினைகளுக்கிடையேயுள்ள உறவுதான் வேற்றுமை எனில் ஆறாம் வேற்றுமை ஒரு வேற்றுமையாக அமையாது. ஆறாம் வேற்றுமை என ஒரு வேற்றுமை இல்லை எனில் ஆறாம் வேற்றுமை உருபுகளாகக் கருதப்படுபவை யெல்லாம் என்ன என்ற ஐயம் எழும். ஆறாம் வேற்றுமை உருபுகளாகக் கருதப் படுபவை அனைத்தும் ஏனைச் சில வேற்றுமை உறவு நிலையில் வரும் பயனிலைகளின் எச்சங்களாகவே காணப்படுகின்றன.

கோட்ட களிறு < களிறு கோட்டை உடையது
—இரண்டாம் வேற்றுமைத் தொடர்.

நெடும் பொறை மிசைய கொன்றை < கொன்றை நெடும் பொறை மிசையிலுள்ளது.
—ஏழாம் வேற்றுமைத் தொடர்.

அரசனது நாடு { அரசனை உடையது
—இரண்டாம் வேற்றுமைத் தொடர்.

அரசனது நாடு { நாடு அரசனுக்கு உரியது.
—நான்காம் வேற்றுமைத் தொடர்.

இதுபோன்று வேறு வேற்றுமை உறவு நிலையிலும் இவை வருதல் உண்டு. தமிழில் 'உடைய' என்னும் வடிவம் தனித்து வழங்குகின்றது. '—அ'கரமும் '—அ'துவும் இணைந்து செயல் படுகின்றன.

சில இடங்களில் பயனிலையும் அதன் எச்சமும் ஒரே வடிவத் தினைக் கொண்டு வழங்குதல் உண்டு.[3]

யானைகள் நிலம் சேர்ந்த (முற்றுத் தொடர்)

நிலம் சேர்ந்த யானை (எச்சத் தொடர்)

கைகள் என (முற்றுத் தொடர்)

என கைகள் (எச்சத் தொடர்)

'நாடு மக்களை உடையது' என்னும் முற்றுத் தொடரிலிருந்து 'மக்களை உடைய நாடு' என்னும் எச்சத் தொடரை வருவிக்கின் றோம். 'உடையது' என்ற முற்றின் எச்சமாகிய 'உடைய' என் பது எவ்வாறு ஒரு வேற்றுமை உருபாதல் முடியும்? மேற்கண்ட சான்றுகளிலிருந்து தமிழில் ஆறாம் வேற்றுமை இல்லை என்ப தும் ஆறாம் வேற்றுமை உருபாகக் கருதப்படுபவை அனைத் தும் ஏனைச் சில வேற்றுமை உறவு நிலையில் வரும் பயனிலை களின் எச்சங்கள் என்பதும் தெளிவாகின்றன.[4]

இவ்விளக்கத்தினடிப்படையில் மேலும் '—அ'கர உருபினை ஆராய்ந்து பார்க்கலாம்.

பொற்குடம் (பொன் — ஆல் இயன்ற குடம்)

இத் தொடரை மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை என்பர் இலக்கணக்காரர்கள்.

கோட்ட களிறு (கோட்(ட்) — (ஐ) — அ (= உடைய) களிறு

'கோட்ட களிறு' என்னும் தொடரில் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு வர அதன் பயனாகிய எச்சம் வெளிப்பட்டு வரு கின்றது. இங்கு வரும் —அ'கரமும் உடைமைப் பொருண்மை யின்தாய் 'உடைய' என்பதன் கட்டிலா மாறியாகச் (free variant) செயலாற்றுகின்றது. சங்க இலக்கியங்களிலும் பதி

னெண் கீழ்க்கணக்கு இலக்கியங்களிலும் ஆறாம் வேற்றுமை உருபெனக் குறிக்கப் பெறும் '—அ'கரம்', 'இருக்கின்ற', 'ஆன', 'உடைய', 'கொண்ட', 'ஆகிய', 'உள்ள', என்னும் சொற்கள் உணர்த்தும் பொருண்மையில் செயலாற்றுதலைக் காண முடிகின்றது.

நல்(மை) — (ஐ) அ ( = உடைய ) நாடு.

இத்தொடரிலும் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு வருகின்றது. அதன் பயனாகிய பெயரெச்சம் வெளிப்பட்டு வெளிப்பட்டு வருகின்றது. 'நன்மை' என்னும் பெயர் வேற்றுமை உறவு நிலையில் '—மை'யீற்றினை இழந்து அதன் அடிச் சொல்லின் மெய் இரட்டித்து நிற்கின்றது.

மேற்கண்ட விளக்கங்களிலிருந்து 'நல்ல', 'கோட்ட' என்ற அமைப்புகள் வேற்றுமை உருபேற்கும் பெயர் வடிவமும் பெயரெச்சமும் இணைந்த அமைப்புக்கள் என்பது தெளிவாகின்றது. 'நல்ல', 'கோட்ட' போன்ற பெயரும் பெயரெச்சமும் இணைந்த அமைப்பினைக் குறிப்புப் பெயரெச்சமாகக் கருதலாம். இது மேலும் ஆராய்தற்குரியது.

'இல்லாத', 'உள்ள' போன்றவற்றைக் குறிப்புப் பெயரெச்சமாகக் கருதுவர் இலக்கணக்காரர்கள். பெயரெச்சத்திற்கிடையே வேற்றுமை உறவு காணப்படுதல் இல்லை. ஆயின் 'நல்ல', 'கோட்ட' போன்ற அமைப்புகளுக்கிடையே வேற்றுமை உறவு காணப்படுகின்றது. எனவே இது குறிப்புப் பெயரெச்சத்தினின்றும் வேறுபடுதலை அறிய முடிகின்றது. இவ்வமைப்பிற்கு முறையான சொல்லாட்சி இன்மையின் இக்கட்டுரையில் இவையும் குறிப்புப் பெயரெச்சமாகவே கருதப்பட்டுள்ளன.

———:(o):———

---

## குறிப்புகள்:

1. *நன்னூல் : நூற்பா : 135, 136*

2. 'நன்மை' என்பதன் வேற்றுமை ஏற்கும் வடிவமாக 'நல்(ல்)' என்பதனைக் கொண்டால் 'நன்மை' என்னும் வடிவம் வேற்றுமை ஏற்றல் கூடாது என்பர் சிலர். பிற்காலத் தமிழில்

வேற்றுமை ஏலா வடிவங்களாகக் கருதப்பட்ட வடிவங்களும் வேற்றுமை ஏற்று வருதலைக் காணமுடிகின்றது.

ஆற்றைக் கடந்தான் ~ ஆறைக் கடந்தான்

3. 'என்' எனும் வேற்றுமை உருபேற்கும் வடிவத்திற்குப் பின்னர் 'உடைய' வருவதால் 'உடைய' என்பதனை வேற்றுமை உருபாகக் கருதுகின்றவர்களும் உண்டு. இவ்வாறாயின் வேற்றுமை ஏலா வடிவத்திற்குப் பின்னரும் 'உடைய' என்பதன் கட்டிலா மாறியாகிய 'உடை' என்பது வருகின்றது.

. . . . . யானுடைக் கற்பின் எப்பரிசு
இழைத்துக் காட்டுகேன்
—கம்பராமாயணம், சுந்தர காண்டம்: 508.

4. களிறு கோட்டை உடையது

> கோட்ட் — ஐ உடை — அ களிறு
⇓ ⇓
∅ ∅
> கோட்ட களிறு

கை எனது > எனது கை

நாடு அரசனுக்கு உரியது

> அரசன் — கு உரிய் — அது நாடு
⇓ ⇓
∅ ∅
> அரசனது நாடு

நாடு அரசனை உடையது

> அரசன் — ஐ உடை — அது நாடு
⇓ ⇓
∅ ∅
> அரசனது நாடு

**உசாத்துணை நூற்கள்:**


1 ச. அகத்தியலிங்கம் (1978) 'வேற்றுமை', ஆய்வுக் கோவை 9, தொகுதி 2, பக். 1-6.

2 ஏ. ஆதித்தன் (1978) பெயரடை விகுதியா? வேற்றுமை உருபா? இலக்கியப் பூங்கா 8, பக். 95-102.

3 ,, (1978) 'தமிழில் வேற்றுமைகள்' வியாழ வட்டக் கருத்தரங்கு, மதுரை காமராசர் பல்கலைக் கழகம் (அச்சில்)

4 ,, (1980) தமிழில் ஆறாம் வேற்றுமையா?' ஆய்வுக் கோவை 12, தொகுதி 2, பக். 43-48.

5 பொன். கோதண்டராமன் (1974) இலக்கண உலகில் புதிய பார்வை', தமிழ் நூலகம், சென்னை.

6 தொல்காப்பியர் (1974) தொல்காப்பியம் — சொல்லதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை.

7 பவணந்தி (1963) நன்னூல், காண்டிகை உரை, ஆறுமுக நாவலர் அச்சகம், சென்னை.


———o———

*இக்கட்டுரை எழுதுவதற்குப் பல்லாற்றானும் உதவிபுரிந்த மொழியியல் பேராசிரியர் முனைவர் இசரயேல் அவர்களுக்கு நன்றி உரித்தாகுக.

# கொடிறுடைக்கும் கூன்கை

**வ. பாண்டியன்,**
ஆராய்ச்சி மாணவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-600 005.

**முன்னுரை:**

மனித இனம் தன்னைத் தீங்குகளினின்றும் காப்பாற்றிக் கொள்ள மேற்கண்ட தற்காப்புச் செயல்கள், பிற்காலத்தில் சமுதாய, அரசியல் காரணங்களால், விதிமுறைகளுக்குள் கட்டுப் படுத்தப் பெற்ற, வீர விளையாட்டுக் கலைகளாக மாறுபாடு அடைந்தன. இவ்வீர விளையாட்டுக் கலைகள் இரண்டு வகையினைச் சார்ந்தவைகளாக இருக்கக் காண்கிறோம். இதே வகைகள் பண்டைக் காலத்தில் நடைமுறையில் இருந்து வந்திருக்கக்கூடும் என்பதற்குரிய சில சான்றுகள் ஆராய்ச்சியினால் தெரிய வருகின்றன. இவ்விரண்டு முறைகளும் முறையே 'அலங்காரம்', 'அங்கம்' என்ற சொற்களால் கூறப்படுகின்றன. 'அலங்காரம்' என்பது, உடற்பயிற்சித்திறன், வேகம், அழகு, சமயக் கருத்துக்களை வெளிப்படுத்தல் ஆகிய காரணங்களைக் குறிக்கோள்களாகக் கொண்டது. 'அங்கம்' என்பது, உயிருக்கு ஏற்படும் தீங்கினின்று, தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் பயன்படுகின்ற, அதே நேரத்தில் எதிரிக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய தற்காப்பு முறையாகும். இந்த 'அங்கம்' என்கின்ற முறையினை, முகலாய பண்பாட்டின் தாக்குதல் காரணமாகப் பலர், துசுமன் என்ற சொல்லினால் குறிப்பிடுகின்றனர். சப்பானியர்கள், இவ்விரண்டு முறையினையும் முறையே, 'பூ-தோ' (Budo), 'பூ-சிட்சு' (Bu-Jitsu), என்ற சொற்களினால் குறிக்கின்றனர். இவற்றை, ஆங்கிலத்தில் Martial-way, Martial art என்று மேல்நாட்டு வீர விளையாட்டு வல்லுநர்கள் அழைப்பர்.

பண்டைக் காலத்தில், இந்தியாவில், குறிப்பாகத் தென்னிந்தியாவில், வீர விளையாட்டுக் கலையானது மிகவும் சிறப்பான நிலையிலிருந்தது என்பதனை இலக்கியச் சான்றுகளினாலும், மற்றும் பல்வேறு வரலாற்றுச் சான்றுகளினாலும் அறிகின்றோம்.

வீர விளையாட்டின் கூறுபாடுகளாக, வெறுங்கை அடிமுறைகள் (Sistems of Empty-Hard techniques) போர்க்கருவி விளையாட்டு முறைகள் (Sistems of weapon techniques) மெய்ம்மறை விட வியல் (Science of Varmam or the science of the vulnerable centres of the body), எலும்பு முறிவு மருத்துவம் (Science of Bone-setting). மூலிகை மருத்துவம் (Herbal therapy), ஆகியவைகள் இருந்துள்ளன. இக்கூறுபாடுகள் இன்றும் இந்தியாவில் காணப்படுகின்றன.

இந்திய வீர விளையாட்டுக் கலைகள் பண்டைக் காலத்தில் வெளி நாடுகளுக்குப் பரவி, இன்று பல்வேறு வடிவங்களுடனும், பெயர்களுடனும் பயிற்றப் பெற்று, மிகவும் புகழடைந்த நிலையிலுள்ளன. ஆசிய நாடுகளில் காணப்பெறும் வீர விளையாட்டுகளான 'குங்-பூ' (சீனம்), 'தே-க்வான்-தோ' (கொரியா), 'கராத்தே' (சப்பான்), 'தைங்' (பர்மா), 'சீலாத்' (மலேயா) போன்றவைகளின் வரலாற்றுப் பிறப்பிடம் இந்தியாவே என்பது வீர விளையாட்டு வரலாற்றாசிரியர்கள் (Historians of Martial arts) பலரது கருத்தாகும்.

தென்னிந்தியாவினின்று, கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் சீன நாட்டிற்குச் சென்ற புத்தமதப் பேரறிஞரான போதிதருமர் என்பவரால், சீனாவில் 'சாவோலின்' (Shaolin) என்ற புத்த மடத்தினில் கற்பிக்கப்பட்ட தென்னிந்திய வீர விளையாட்டுக் கலையே இன்று உலக முழுவதும் பரவி, வெவ்வேறு வடிவங்களில் காணப்படுகின்றது.[1]

பண்டைக் காலத் தென்னிந்திய நாகரிகமானது தமிழக நாகரிகமாகவிருந்த காரணத்தால், பண்டைத் தமிழக வீர விளையாட்டினைப் பற்றிய உண்மைகளை அறிவதானது, தற்போதுள்ள ஆசிய நாடுகளின் வீர விளையாட்டுகளின் பண்டைய நிலை, பிற்கால வளர்ச்சி, அவ்வளர்ச்சியின் காரணங்கள் ஆகியவற்றை அறிய வழி வகுக்கும். இவ்வித ஆராய்ச்சியினுக்குத் தமிழிலக்கியங்கள் பெரிதும் துணைபுரிவனவாகும்.

தமிழிலக்கியங்களில் தலைசிறந்து விளங்கும் அறநூலாம் திருக்குறளில் வீர விளையாட்டினைப் பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ள குறள்கள் பல உள்ளன. அவற்றுள் ஒன்றான, பின்வரும் குறட்பாவே இக்கட்டுரையில் ஆய்வுக்குக் கொள்ளப்படுகிறது. அக்குறட்பா பின்வருமாறு,

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லாத வர்க்கு

—குறள்: 1077

இக்குறட்பாவின் பொருள் ''கயவர் தமது கொடிறினை உடைக்கும் கூன்கையினை உடையவர்க்கே அல்லாமல், மற்றவர்க்குத் தம் ஈரக்கையினையும் தெறியார்'' என்பதாம். இக்குறட்பாவில் காணப்படும் 'கொடிறு', 'கூன்கை', ஆகிய சொற்களுக்கு உரையாசிரியர்கள் பல்வேறு பொருள்களைக் கூறுகின்ற காரணத்தினால் இவ்வுரைகளும் வேறுபடுகின்றன. இவ்வுரை வேறுபாடுகள் ஆய்வுக்கு உரியனவாக அமைவதால் அவை இங்குத் தொகுத்து நோக்குதற்குரியவை ஆகின்றன.

உரையாசிரியர்கள் கூறும் பொருள்கள்:

1 கயவர் தம் கதுப்பினை நெரிப்பதாக வளைந்த கையினை உடையவரல்லாதார்க்கு, தாம் உண்டு பூசிய கையைத் தெறித்தல் வேண்டும் என்று இருந்தாலும் தெறியார் என்றவாறு''.—பரிமேலழகர்[2]

2 ''தம் கதுப்பினை ஒடிக்கும் வளைந்த கையினை உடையாரல்லாதார் ஈரக் கையையும் தெறியார் கயவர்''.

—மணக்குடவர்,[3] பரிப்பெருமாள்[4]

3 ''ஈகிற கைவிதிர்த்துக் கொள்ளார் கயவர்
கொறடாலே அடிப்பவர்க்குக் கொடுப்பர்''

—பரிதியார்[5]

4 ''பிறர் தம்பால் இரந்து கொள்ளும் இடத்து ஈரக்கை விதிர்த்தாலும் இலர் கயவர் ஆனவர்; கொடிறுபோல இடுக்கிப் பிடித்து உடம்பை உடைக்கும் திறமையால் கூரிய கையினை உடையோர் அல்லாத குணம் உடையவர்க்கு'' —காலிங்கர்[6]

5 ''பல்லை உடைக்கும் கொடுங்கையர்க்கு அன்றிக் கயவர்கள் எச்சிற் கையும் உதற மாட்டார்கள்''

—முனைவர் வ. சுப. மாணிக்கம்[7]

6 ''கயவர், தம் கன்னத்தினைக் குத்தி உடைப்பதாய கொடிய கையை உடையவர்க்குக் கொடுப்பர்; அப்படிச் செய்யாமல் இதமாகக் கேட்பவர்க்குத் தாம் உண்டு கழுவிய கையின் நீரையுந் தெளியார்''

—ஓர் பழைய உரை[3]

7 ''முகவாய்க் கட்டையை உடைக்கும், மடக்கிய கையினை

உடையவர்க் கல்லாமல் கயவர்கள் உண்ட ஈரமுடைய கையைக் கூட மெலிந்து இரந்தவர்க்கு விதிர்க்கமாட்டார்''

—கி வரதராசன்[9]

8 ''தம் கழுத்தினை ஒடிக்கும் வளைந்த கையினை உடையவர் அல்லாதவர்க்கு, ஈரக்கையையும் கயவர் தெறியார்''

—ஓர் புது உரை[10]

'கூன்கை' என்ற சொல்லில் எவ்விதமான கருவியும் (Weapon) பயன்படுவதனைப் பற்றிய குறிப்பும் பெறப்படாமையின், பரிதியார் உரை கொள்ளத் தக்கதாகத் தெரியவில்லை எனலாம்.

மேலே எடுத்துக் காட்டப்பட்ட உரைக் குறிப்புகளினின்றும் நாம் அறிய வரும் பொருள் வேறுபாடுகளாவன:

அ) கொடிறு: 'கதுப்பு' (கன்னம்)

—பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், ஓர் பழைய உரை.

'பல்' —முனைவர் வ. சுப. மாணிக்கம்

'முகவாய்க் கட்டை' கி. வரதராசன்

'கழுத்து' —புது உரை

ஆ) கூன்கை: 'வளைந்த கை'

—பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், கி. வரதராசன், புது உரை

'கொடுங்கை' —முனைவர் வ. சுப. மாணிக்கம்

'கூரிய கை' காலிங்கர்

இ) தாக்குதலின் விளைவு; 'கதுப்பு நெரிதல்'

—பரிமேலழகர்

'கதுப்பு ஒடிதல்'

—மணக்குடவர், பரிப்பெருமாள், பழையஉரை

'உடம்பு உடைதல்' —காலிங்கர்

'பல் உடைதல்' —முனைவர் வ. சுப. மாணிக்கம்

'முகவாய்க் கட்டை உடைதல்' —கி. வரதராசன்

'கழுத்து உடைதல்' —புது உரை

(தொடரும்)

**பதிப்பாசிரியர் குழு :**

1. திரு. **எஸ். நடராசன்**, எம். எல். ஏ.,
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. வித்துவான். க. **வெள்ளைவாரணனார்**,
துணைப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

3. திரு. வித்துவான். **பி. விருத்தாசலம்**, எம். ஏ.,
முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4. திரு. வித்துவான். **ச. பாலசுந்தரம்**,
துணை முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

5. திரு. வித்துவான். **சி. கோவிந்தராசன்**,
பேராசிரியர், (ஓய்வு)
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்

6. திரு. வித்துவான். **மீனா. இராமதாசன்**, எம். ஏ.,
முதனிலைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவர மேல்நிலைப்பள்ளி,
கரந்தை, தஞ்சாவூர்.

7. திரு. **அரங்க. வே. சுப்பிரமணியன்** பி. ஏ.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
பொழிற்றொண்டர்.

—o—

Regd No. TN / TJ /17.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

# தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

| | | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| 1. | ஆண்டு வரி ... | 10 — 00 | 12 — 00 |
| 2. | தனி இதழ் ... | 0 — 90 | |
| 3. | ஆயுள் வரி ... | | 100 — 00 |

## சங்க உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திங்கள் வரி | 0—25 காசுகள் |
| ஆண்டு வரி | 3—00 |
| ஆயுள் வரி | 100—00 |

## விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்:

| | |
|---|---|
| நெல்லை வருக்கைக்கோவை | 0—12 |
| சித்தரந்தாதி | 0—12 |
| சுருதி வீணை | 0—25 |
| பரத சாத்திரம் | 1—50 |
| கவியரசு நினைவு மலர் | 1—00 |
| சிவமும் செந்தமிழும் | 0—25 |
| Garland of Tamil Poetry | 2—00 |
| கச்சிக் கலம்பகம் — (பூண்டி அரங்கநாத முதலியார்) | 0—50 |
| தொல்—பொதுப்பாயிர உரை | 0—12 |
| தமிழரசி குறவஞ்சி | 0—62 |
| யாழ்நூல்—சுவாமி விபுலானந்தர் | 50—00 |
| கட்டுரைப் பொழில் (மணிவிழா மலர்) | 12—00 |
| மெய்ஞ்ஞானத்தின் — கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு) | 2—00 |
| நக்கீரர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு) | 3—00 |
| கபிலர் ,, ,, | 4—00 |

ஆசிரியரும் வெளியிடுபவரும்: திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ., கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002. அச்சிடுபவர், திருமதி, S. நிர்மலா, அன்னை அச்சகம், 1734, காந்தி சாலை, தஞ்சாவூர் - 613002.